**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை**

**பொது முகாமைத்துவக் குழுக் கூட்ட அறிக்கை – 2024.02.06**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பொது முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2024.02.06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப 10.30 மணியளவில் செயலாளர் திருமதி. த. தர்சினி தலைமையில் ஆரம்பமாகியது. இக் கூட்டத்தில்

1. திருமதி. த. தர்சினி – செயலாளர்
2. திரு. க. தனபாலசிங்கம் - சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்
3. திருமதி. ஜெ. சங்கீதா - ஆய்வு உத்தியோகத்தர்
4. திருமதி. பா. இந்துசசி - அபிவிருத்தி உத்தியோகத்தர்
5. திரு. ம. ரகுசீலன் - தொழில்நுட்ப உத்தியோகத்தர்
6. திரு. த. ஜசோதரன் - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
7. திருமதி. ந. நியூதா - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்

ஆகிய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். குறித்த கூட்டத்தில் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களை வரவேற்று தலைமையுரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து செயலாளர் அவர்களினால் 2024.01.11 திகதிய பொது முகாமைத்துவக் கூட்ட அறிக்கைகள் அங்கீகாரம் கோரப்பட்டது. செயலாளர் திருமதி. த. தர்சினி அவர்களால் கூட்ட அறிக்கை முன்மொழியப்பட்டு ஆய்வு உத்தியோகத்தர் திருமதி. ஜெ. சங்கீதா அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 01/ 06.02.2024**

எமது பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி பா. இந்துசசி அவருக்கு பதிலாக 01.03.2024 இலிருந்து தற்போது பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.கோ. இராஜபாஸ்கரன் அவர்களை பிரதேச சபையின் நடைமுறைக்கணக்கு 70109914, 0088989999 மற்றும் சேமிப்பு கணக்கு 92139792 ஆகிய வங்கிக் கணக்குகளின் காசோலைகளில் இரண்டாவது கையொப்பத்தினை இடுவதற்கான அனுமதியினை உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து பெற்று செயற்படுத்துவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 02/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் அலுலகப்பாவனைக்கு ஆறு மாத காலத்திற்கு தேவையான காகிததாதி பொருட்களை கொள்வனவு செய்வதெனவும் அதற்கான கொடுப்பனவினை வழங்குவதற்கான அனுமதியினை வழங்குவதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 03/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் வெளிவாரி உத்தியோகத்தர்களின் 2024 தை மாத சம்பளம் 276,450.00 ரூபாவினை வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 04/ 06.02.2024**

எமது பளை பொதுச்சந்தையில் வரி அறவீட்டு நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்ட தராசு பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதால் குறித்த தேவைக்கு புதிதாக மேடைத்தராசு மற்றும் தூக்குத்தராசு என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கான அனுமதியினை வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 05/ 06.02.2024**

எமது சபையில் பயிலுனராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பயிற்சி நிலையத்தால் இரு பயிலுனரையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியினைப் பெற்று 15.03.2024 இல் இருந்து இணைத்துக் கொள்வதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**இணைத்துக்கொள்வோர் விபரம்**

1. Ms.Nakeswaran Thanusika - ICTT
2. Ms. ThiruvarudselvamVizhivani - ICTT

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 06/ 06.02.2024**

எமது சபையின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் க. லோகநாதன், கரியாலயகாரிய சகாயராக கடமையாற்றும் பொ. சந்திரகுமார்

ஆகியோரிற்கு பத்து மாத சம்பள முற்பணத்தை இடர் உதவிக் கடனாக வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 07/ 06.02.2024**

எமது சபையின் பாவனையில் உள்ள வாகனங்களின் எரிபொருளுக்கான தை மாத முதலாவது பகுதிக் கொடுப்பனவு ரூபா 204,508.00 னையும் இரண்டாவது பகுதிக் கொடுப்பனவு ரூபா 189,780.00 னைவும் வழங்குவதற்கு அனுமதிப்பதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 08/ 06.02.2024**

எமது பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் முள்ளிப்பற்று, முகமாலை உப அலுவலகங்களுக்கு CCTV Camera System இனை பத்திரிகையில் கேள்வி கோரி எவரும் பெற்றுக் கொள்ளாத நிலையில் மீள கேள்வி கோரி கொள்வனவு செய்வதற்கு அனுமதிப்பதெனவும் குறித்த கொள்வனவிற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் தலைவராக வடமாகாண கட்டடங்கள் திணைக்களத்தின் மின்சார பொறியியலாளரை நியமிப்பதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 09/ 06.02.2024**

2024 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத்திட்டம், செயற்பாட்டுத்திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுத்திட்டம் என்பவற்றை சமர்ப்பித்து அனுமதி கோரப்பட்ட வகையில் அதற்கான அனுமதியினை வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 10/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் எல்லைக்குட்பட்ட புலோப்பளை கச்சார்வெளி இணைப்பு வீதிக்கு சபையில் காணப்பட்ட இடிபாட்டினை பயன்படுத்தி உருளையிட்டு வீதியினை மக்கள் போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் செப்பனிடுவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 11/ 06.02.2024**

சபை நிதி – 2023 ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கீழ் வரும் வேலைகளுக்கு காலநீடிப்பு வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

- PSDG – Dumping Ground Road - 24.01.2024 – 06.03.2024
- Gravel Filling work at pallai Area – 18.01.2024 – 07.02.2024

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 12/ 06.02.2024**

2023 வரவு செலவுத்திட்டத்தில் விசேடமாக ஒதுக்கப்பட்ட வாழ்வாதாரம் எனும் திட்டத்தில் நிதி மிகுதியாக காணப்படும் பயனாளிகளுக்கு தேவையான மேலதிக பொருட்களை கொள்வனவு செய்து வழங்குவதெனவும் மீதியாக உள்ள நிதியினை சபையின் வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளவதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 13/ 06.02.2024**

2023 வரவு செலவுத்திட்டத்தில் விசேட ஒதுக்கீட்டின் கீழ் வாழ்வாதாரம், வலுவிழந்தோர் எனும் திட்டத்தின் கீழ் மாடு, கோழிக்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்ட வகையில் அதற்கான கொடுப்பனவினை மேற்கொள்வதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 14/ 06.02.2024**

கட்டிட விண்ணப்பத்திற்கு விண்ணப்பிப்பவர்களிடம் ஆவணங்களில் ஏற்படும் சிக்கல்களை தவிர்ப்பதற்காக அந்நிலத்திற்கு உரித்தான ஆவணத்தின் 30 வருட கால தோம்பினையும் சேர்த்துக் கோருவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 15/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்து காணப்படும் வீதி விளக்குகளை மின்சார சபையின் மதிப்பீட்டினைப் பெற்று திருத்தம் செய்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதெனவும் அதற்கு தேவையான பொருட்களை கொளவனவு செய்வதற்கு அனுமதிப்பதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 16/ 06.02.2024**

எமது சபையின் புலோப்பளை உபஅலுவலகத்திற்குட்பட்ட பளை பஸ்தரிப்பிடத்திற்கு மேலுள்ள மேல்மாடிக்கடை இல.05 இனை நீண்டகாலகுத்தகைக்கு வழங்கும்பொருட்டு 10 வருட KeyMoney இணை பெற்று கேள்விகோரல் செய்வதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 17/ 06.02.2024**

எமது சபையின் புலோப்பளை உப அலுவலகத்திற்குட்பட்ட பளை பஸ்தரிப்பிடத்திலுள்ள தேசிய லொத்தர் சபையின் அதிஸ்டலாபச்சீட்டிழுப்பு கடைக்கான நிலவாடகையாக மாதாந்தம் ரூபா 1000.00 இனை பெப்ரவரி மாதத்திலிருந்து அறவிடுவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 18/ 06.02.2024**

பளை பஸ்தரிப்பிட பகுதியில் தற்காலிகமாக வண்டில் மூலம் சிற்றுண்டி வியாபாரம் செய்ய அனுமதி கோரப்பட்ட நிலையில் குறித்த கடைக்கான வாடகையாக நாளாந்தம் ரூபா.50.00 வீதம் அறவிட நடவடிக்கை மேற்கொள்வதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 19/ 06.02.2024**

எமது சபையில் இலத்திரணியல் நிதிப்பரிமாற்ற முறைகள் மூலம் வருமான அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை வங்கி பளையின் ஊடாக Poss machine ஊடாக Credit / Debit Card மூலம் நிதி பரிமாற்ற முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிப்பதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 20/ 06.02.2024**

எமது சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை சேகரிப்பதற்கு ஏதுவாக திண்மக்கழிவகற்றல் நடவடிக்கைக்காக வெளிவாரி அடிப்படையில் பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திடமிருந்து ஆறு மாத காலத்திற்கு சாரதி ஒருவரைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிப்பதென ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 21/ 06.02.2024**

2024 ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் விசேட ஒதுக்கீட்டின் கீழ் முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல், ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இலைக்கஞ்சி வழங்குதல் என்பவற்றிற்கு கௌரவ ஆளுநரின் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பிவைக்கப்பட்ட வகையில் 2024 பெப்ரவரி இல் இருந்து குறித்த செயற்திட்டத்தை மேற்கொள்வதெனவும் இதற்கு தேவையான பொருட்களை பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து கொள்வனவு செய்து வழங்குவதற்கு அனுமதிப்பதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 22/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் திண்மக்கழிவகற்றல் சேவையினை வினைத்திறனாக மேற்கொள்ளும் பொருட்டு குறித்த சேவையுடன் தொடர்புடையவர்களை உள்ளடக்கி Viber Group ஒன்றை உருவாக்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 23/ 06.02.2024**

எமது பிரதேச சபையில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி பா. இந்துசசி அவருக்கு பதிலாக 01.03.2024 இலிருந்து தற்போது பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி.கோ. இராஜபாஸ்கரன் அவர்களை கொடுப்பனவுகளுக்கான உறுதிச்சீட்டுகளில் சான்றுப்படுத்தும் உத்தியோகத்தராக நியமிப்பதெனவும் அதற்கான அதிகாரக்கையளிப்பினை மேற்கொள்வதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 24/ 06.02.2024**

எமது பிரதேச சபையின் உபஅலுவலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் கீழ் வரும் இடங்களினை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் முச்சக்கரவண்டித்தரிப்பிடங்களாக பிரகடனப்படுத்தி வர்த்தகமானப்படுத்துவதெனவும் உரிய வருமான அறவீடுகளை அறவிட்டுக்கொள்வதெனவும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

**பிரகடனப்படுத்தப்படும் இடங்கள்**

1. இயக்கச்சி சந்தையின் முற்பகுதி

2. புதுகாட்டுச்சந்தியில் சபைக்கு சொந்தமான நிலப்பகுதி
3. பளை பேரூந்து தரிப்பிட நிலையத்தின் மேற்குப்பக்கமாக உள்ள சபையின் நிலப்பகுதி

**நிர்வாகக் கட்டளை இலக்கம் :- 25/ 06.02.2024**

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் கீழ் வரும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட வகையில் அதற்கான அனுமதியினை வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

| இல | திகதி | உ.சீ.இல | வாக்குப்பண விபரங்கள் | பெயர்-விபரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 11.01.2024 | 1 | ப.கடன் | செயலாளர் PPS-L.தினேஸ், V.லவேந்திரா ஆகியோருக்கு விழாமுற்பணம் வழங்கும் வகையில் | 20,000.00 |
| 2 | 12.01.2024 | 2 | நா.வைப்பு | செயலாளர் PPS-PSDG 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் Dumping ground access Road இற்கு வழங்கிய 1 வது பகுதிக் கொடுப்பனவு சபை நிதி முற்பணத்தினை சீராக்கும் வகையில் | 2,224,349.40 |
| 3 | 12.01.2024 | 3 | நா.வைப்பு | DKD Engineering Construction - PSDG 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் Dumping ground access Road வேலைக்குரிய 1 வது பகுதிக் கொடுப்பனவின் Vat கொடுப்பனவு வழங்கும் வகையில் | 333,652.41 |
| 4 | 12.01.2024 | 4 | நா.வைப்பு | KP Construction-PSDG 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட Construction of cemetry at Thenavil வேலைக்குரிய 2 nd & Final கொடுப்பனவு வழங்கும் வகையில் | 1,582,575.01 |
| 5 | 12.01.2024 | 5 | நா.வைப்பு | தலைவர்-PSDG 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thannadshi Road Stage-II வேலைக்குரிய 1வது பகுதிக் கொடுப்பனவு வழங்கும் வகையில் | 1,362,119.42 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | 12.01.2024 | 6 | நா.வைப்பு | SJR Construction-PSDG 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட Reconstruction of Thannadshi Road Stage-II வேலைக்குரிய 3 rd & Final கொடுப்பனவு வழங்கும் வகையில் | 563,266.14 |
| 7 | 12.01.2024 | 7 | நா.வைப்பு | DKD Engineering Construction - CSR 2023 இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட oorvanikanpattu Muththumari Amman Kojil Road வேலைக்குரிய 2 nd & Final கொடுப்பனவு வழங்கும் வகையில் | 3,219,794.07 |
| 8 | 17.01.2024 | 8 | நா.வைப்பு | ஞா.கைற்றஸ் மனோ- திரவக்கழிவகற்றல் முற்பணம் திரும்பச் செலுத்தும் வகையில் | 8,500.00 |
| 9 | 17.01.2024 | 9 | Advance | செயலாளர் pps- சில்லறைச் செலவிற்கான முற்பணம் பெறும் வகையில் | 20,000.00 |
| 10 | 17.01.2024 | 10 | சி.கடன் கொடுத்தோர் | SriLanka Telecom-எமது சபையின் தொலைபேசிக்கட்டணம் செலுத்தும் வகையில் | 19,366.54 |
| 11 | 18.01.2024 | 11 | ப.கடன் | செயலாளர் pps-சபை ஊழியர்களுக்கு விசேட முற்பணம் வழங்கும் வகையில் | 76,000.00 |
| 12 | 22.01.2024 | 12 | நி.வைப்பு | முகாமையாளர்-எமது சபையின் நடைமுறைக்கணக்கிலுள்ள நிதியில் பத்து மில்லியன் தொகையினை மூன்று மாத குறுங்கால நிலையான வைப்பிலிட்ட வகையில் | 10,000,000.00 |
| 13 | 22.01.2024 | 13 | நி.வைப்பு | முகாமையாளர்-எமது சபையின் நடைமுறைக்கணக்கிலுள்ள நிதியில் பத்து மில்லியன் தொகையினை ஒரு மாத குறுங்கால நிலையான வைப்பிலிட்ட வகையில் | 10,000,000.00 |
| 14 | 22.01.2024 | 14 | 207(3) | செயலாளர்- 09.01.2024 ம் திகதி இடம்பெற்ற சுற்றுச் சுழல் தொடர்பான தொழில்நுட்பக்குழு கலந்துரையாடலுக்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 2,500.00 |
| 15 | 23.01.2024 | 15 | Salary | ஊழியர் சம்பளம் -தை | 3,497,413.08 |
| 16 | 23.01.2024 | 16 | சி.கடன் | Cameralk (Pvt)Ltd -2023 விசேட ஒதுக்கீட்டின் கிழ் வாழ்வாதாரம் எனும் திட்டத்தின் கீழ் Camera கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு | 82,500.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17 | 31.01.2024 | 17 | 105(3) | Regional Valuer-மாதாந்த வாடகை மதிப்பீடு-நவீன மரக்கறிக்கடை சந்தைத் தொகுதிக்கான விலைமதிப்பு செய்வதற்கான முற்பணம் செலுத்தும் வகையில் | 1,000.00 |
| 18 | 31.01.2024 | 18 | 105(3) | Regional Valuer-மாதாந்த வாடகை மதிப்பீடு-புகையிரத நிலைய வீதியில் உள்ள கடைக்கான மதிப்பீடு செய்வதற்கான முற்பணம் செலுத்தும் வகையில் | 300.00 |
| 19 | 31.01.2024 | 19 | 105(3) | Regional Valuer-மாதாந்த வாடகை மதிப்பீடு-திறந்த சந்தை தொகுதிக்கான மதிப்பீடு செய்வதற்கான முற்பணம் கொடுக்கும் வகையில் | 1,000.00 |
| 20 | 31.01.2024 | 20 | 105(3) | Regional Valuer-புலோப்பளை தற்காலிக நில வாடகைக் கடைகளுக்கான விலைமதிப்பீட்டு கட்டணம் செலுத்தும் வகையில் | 5,000.00 |
| 21 | 31.01.2024 | 21 | 101(3) | செயலாளர்- எமது சபையின் செயலாளருக்கு தலைவர் உறுப்பினருக்கான படியினை வழங்கும் வகையில் | 10,000.00 |
| 22 | 31.01.2024 | 22 | 101(2) | திருமதி.த.தர்சினி-2024 தை மாதத்தில் விடுமுறை நாளில் கடமையாற்றிய வகையிலான கொடுப்பனவு பெற்றுக்கொள்ளும் வகையில் | 9,222.00 |
| 23 | 31.01.2024 | 23 | சி.கடன் | Sri Meenadshi Amman Timber Deport- விசேட ஒதக்கீட்டின் கீழ் வாழ்வாதாரம் எனும் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட மேசைகளுக்கான கொடுப்பனவினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து வழங்கும் வகையில் | 19,800.00 |
| 24 | 31.01.2024 | 24 | சி.கடன் கொடுத்தோர் | Sri Meenadshi Amman Timber Deport- விசேட ஒதுக்கீட்டின் கீழ் பெண்கள் அபிவிருத்திக்காக கொள்வனவு செய்யப்பட்ட வேம்பு, மேசை,கோழிக்கூடு கொடுப்பனவினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து வழங்கும் வகையில் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 25 | 31.01.2024 | 25 | சி.கடன் கொடுத்தோர் | Sri Meenadshi Amman Timber Deport- விசேட ஒதுக்கீட்டின் கீழ் வலுவிழந்தோருக்கு கொள்வனவு செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகளிற்கான கொடுப்பனவினை சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து வழங்கும் வகையில் | 19,400.00 |
| 26 | 31.01.2024 | 26 | சி.கடன் கொடுத்தோர் | Sri Meenadshi Amman Timber Deport- சபை நிதியின் கீழ் முகமாலை பொது நூலகத்திற்கு Paper Reading Table கொள்வனவு செய்தமைக்கான கொடுப்பனவு வழங்கும் வகையில்(சில்லறைக்கடன் கொடுத்தோர் கணக்கிலிருந்து ) | 24,500.00 |

இத்துடன் இக் கூட்டமானது பி.ப 12.30 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

……………………..

செயலாளர்,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,

பளை.